மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 05 | வியாழக்கிழமை | 12.09.2024 | கதிர் 359




# அரசியல் கைதிகள் விடயத்தில் அரசின் உண்மை நிலை என்ன?

## கைதிகள் தினத்தில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேள்வி

"தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்கிறது. ஆனல், மூன்று தசாப்த காலங்களாக சிறையில் கொடுமை அனுபவித்து வரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை" என்று குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

தேசிய சிறை கைதிகள் தினமான இன்று யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போது, "அரசியல் கைதிகளை விடுதலை செய்வதே ஆட்சி அதிகாரதிற்கு உகந்தது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

6






# யாழ்ப்பாணத்தில் நாமலின் பிரசாரக் கூட்டம் ஆரம்பம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று வியாழக்கிமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பார் தம்பித்துரை ரஜீவ்வின் ஏற்பாட்டில் இந்தப் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

# அநுரவை கைது செய்யுங்கள் சி. ஐ. டி. யில் முறைப்பாடு

தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்கவை கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுர குமார இனக்குழுக்கள் மத்தியில் அமைதியின்மையை

6



# காணமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு என்ன?

## ஜனாதிபதி ரணில் சொன்ன தகவல்

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு எதிர்வரும் 3 வருடங்களுக்குள் நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2

# வாக்காளர் அட்டை இல்லையா எவ்வாறு வாக்களிக்க முடியும்?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இன்றியும் வாக்கினைப் பதிவு செய்ய முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்றவர்கள் மாத்திரம் அன்றி, உள்நாட்டிலேயே வசிக்கின்றவர்களும் வாக்காளர் அட்டை இன்றி வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டை என்பது வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்க வேண்டிய தொகுதியை அடையாளம் காண்பதற்கும் வாக்குச்சாவடியில் தமது தொடரிலக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே வழங்கப்படுகிறது.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது அடையாள அட்டையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான அடையாள ஆவணங்களைக் காண்பித்து வாக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குப் பிரவேசித்து, தமது அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியையும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வழிகளில் வாக்காளர்கள், வாக்காளர் அட்டையின்றியே வாக்களிப்பதற்கான வசதிகள் இருப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித் துள்ளார்.

# யுத்த குற்றங்களில் ஈடுபட்டோருக்கு எதிராகத் தடை விதிக்கப்படுமா?

யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையர்களிற்கு எதிராக தடைகள் விதிக்கப்படுமா என்பது குறித்து பிரிட்டன் தெளிவான பதிலை வழங்க தவறியுள்ளது.

எதிர்கால தடைகள் குறித்த ஊகங்களை வெளியிடுவது பொருத்தமற்ற விடயம் ஏனென்றால் தடைகளினால் ஏற்படக்கூடிய தாக்கத்தினை அது குறைக்கலாம் என பிரிட்டனின் வெளிவிவகார, பொதுநலவாய, அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் கதெரின் வெஸ்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களிற்கு எதிரான மக்னிட்ஸ்கி பாணியிலான தடைகளின் தாக்கம் குறித்த எழுத்துமூல கேள்விக்கே அவர் இதனை தெரிவித்துள்ளார். மனித உரிமை விவகாரத்தில் இலங்கை பிரிட்டனிற்கு தொடர்ந்தும் முன்னுரிமைக்குரிய நாடாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர் உண்மை நீதி பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் பிரிட்டன் தொடர்ந்தும் இலங்கையுடன் ஈடுபாட்டை பேணுகின்றது என குறிப்பிட்டுள்ளார். சர்வதேச மனித உரிமை தடைகள் என்பது பிரிட்டனின் வெளிவிவகார கொள்கையின் முக்கியமான ஒரு சாதனம் என தெரிவித்துள்ள அவர் பரந்துபட்ட வெளிவிவகார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியம் என கருதப்படும் தருணத்தில் தடைகளை பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் திகதி அறிவிப்பு

காலி, எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி தேர்தல் நடைபெறும் என காலி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்த நிலையில், தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த ஆகஸ்ட் 26ம் திகதி ஆரம்பமாகியிருந்த நிலையில், காலி மாவட்ட செயலகத்தில் இன்று நண்பகல் 12.00 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டன.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான அட்டவணையைக் கடந்த மாதம் 26ம் திகதி தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

அதற்கமைய ஆகஸ்ட் 26ம் திகதி முதல் செப்டெம்பர் 11ம் திகதி வரை கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும், செப்டெம்பர் 9ம் திகதி முதல் 12ம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எல்பிட்டிய பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நான்காவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, பிரதேச சபையின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் 6ம் திகதியுடன் நிறைவடைந்தது.

இருப்பினும் சிறப்பு வர்த்தமானியின் ஊடக எதிர்வரும் நவம்பர் 4ம் திகதி வரை எல்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டது.

### காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றையதினம் ஊடகவியலாளர்களை கொழும்பில் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுதல், நிதி வழங்குதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது மேலும் தெரிவித்தார்.

# சஜித்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு மைல்கல்

## மனோ கணேசன் பெருமிதம்

சஜித் -தமிழ் முற்போக்கு கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தம், மலையக வரலாற்றில், ஜனாதிபதி ஆகும் வாய்ப்புள்ள இலங்கையின் பெரும் கட்சி தலைவர் ஒருவருடன் கையெழுத்திட்டு செய்து கொள்ளப்பட்டுள்ள முதல் ஒப்பந்தம் ஆகும். ஈழத் தமிழ் உடன்பிறப்புகள் தொடர்பில் செய்யப்பட்ட பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களுக்கு சமனான ஒப்பந்தம் இதுவாகும்.

ஆகவேதான், தமிழ் முற்போக்கு கூட்டணியின் மலையக சாசனத்தை அடிப்படையாக கொண்ட சஜித்-தமுகூ புரிந்துணர்வு உடன்படிக்கை, மலையக வரலாற்றில் ஒரு மைல் கல் என தமுகூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று நடைபெற்ற, மலையக சாசனம் மற்றும் சஜித்-தமுகூ புரிந்துணர்வு உடன்படிக்கை வெளியீட்டு விழாவில் கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் திகாம்பரம், ராதாகிருஷ்ணன், சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதில் மனோ எம்பி மேலும் கூறுகையில்,

சஜித் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவருக்கு என் மீது நம்பிக்கை உண்டு. அதேபோல் திகா, ராதா ஆகியோருக்கும் அந்த பரஸ்பர நம்பிக்கைகள் உள்ளன. இருந்தாலும் அரசியல் என்பது சமூக பொறுப்பு கொண்டது. ஆகவே தனிப்பட்ட நம்பிக்கைகளுக்கு அப்பால் சென்று நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டோம்.

இதில் சஜித் பிரேமதாச, நான், ராதாகிருஷ்ணன், திகாம்பரம், உதயகுமார் ஆகியோர் கையெழுத்து இட்டுள்ளோம் எமது பரஸ்பர கையெழுத்துகள் மூலம் இந்த ஆவணம் அதிகார பூர்வ அடையாளம் பெறுகின்றது இந்த ஆவணம் இன்று இங்கே உங்களுக்கு வழங்க படுகிறது. இதன் மூலம் இது பகிரங்க ஆவணம் ஆகிறது.

இலங்கை வரலாற்றில் ஈழத்தமிழ் உடன்பிறப்புகள் தொடர்பில் பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. எம்மை கலந்து ஆலோசிக்காமலேயே இலங்கை-இந்திய அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தம்தான், நமது மக்களை மந்தைகள் போல் பிரித்து கொண்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஆகும்.

மலையக வரலாற்றில், ஜனாதிபதி ஆகும் வாய்ப்புள்ள இலங்கையின் பெரும் கட்சி தலைவர் ஒருவருடன் நாம் செய்த முதல் கையெழுத்து ஒப்பந்தம் இதுவாகும். ஆகவே, இது ஒரு வரலாற்று மைல் கல் ஆகும்.




இதிலே, வரலாறு முழுக்க இலங்கை நாட்டுக்கு மலையக மக்கள் வழங்கிய பங்களிப்பு அங்கீகரிக்க பட்டுள்ளது. குடியுரிமை, வாக்குரிமை பறிப்புகள் காரணமாக நமது வளர்ச்சி ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது குறை வளர்ச்சி கண்டுள்ளது ஏற்ற பட்டுள்ளது.

ஆகவே விசேட குறைதீர் சட்ட ஏற்பாடுகள் எமக்கு அவசியம் என்பதை ஏற்று உடன்பாடு காண பட்டுள்ளது. எமது வாழ்வாதார காணி உரிமை, வீட்டு காணி உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை ஆகியவை தொடர்பில் உடன்பாடு காண பட்டுள்ளது. .

விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழில் நுட்ப பாடங்களை தமிழில் கற்பிக்கும் விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஒன்றை ஸ்தாபிக்க உடன்பாடு காண பட்டுள்ளது. .உடன் படிக்கையே அடிப்படையாக அமையும்" என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

எமது இளம் பெண்களுக்கான விசேட தாதியர் பயிற்சி கல்லூரி ஒன்றை ஸ்தாபிக்க உடன்பாடு காண பட்டுள்ளது. சஜித் ஆட்சி அமைந்தவுடன் அமைக்க படும். மலையக மக்கள் தொடர்பிலான ஜனாதிபதி செயலணிக்கு, இந்த சஜித்-தமுகூ புரிந்துணர்வுஉடன் படிக்கையே அடிப்படையாக அமையும்" என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

# தபால் மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவு

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன.

செப்டெம்பர் 4, 5, 6 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு நேற்றும் இன்றும் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இன்று தபால்மூல வாக்களிப்பை பயன்படுத்தும் வாக்காளர்கள் தமது பணியிடங்கள் அமைந்துள்ள மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ சென்று வாக்களிக்க முடியும்.

எவ்வாறாயினும், தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த எந்தவொரு அரசாங்க ஊழியர்களும் இன்றுடன் தபால் மூல வாக்குகளைப் பயன்படுத்த முடியாது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ். வந்த நாமல் ராஜபக்ஷவின் முக்கியமான சந்திப்புக்கள்





ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை வருகைதந்த நிலையில் நல்லை ஆதீனத்திற்குச் விஜயம் செய்தார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை சந்தித்த நாமல் ராஜபக்ஷ பொன்னாடை போர்த்து கௌரவித்தார். பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்ட நிலையில் நல்லை ஆதீன குரு முதல்வரால் நாமல் ராஜபக்ஷவுக்கு நினைவாக நந்திக் கொடி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷவிற்கும் யாழ் மறை மாவட்ட ஆயரிற்கு இடையிலான சந்திப்பு இடம் பெற்றது. யாழ் மறை மாவட்ட ஆயிரம் களத்தில் இடம்பெற்று சந்திப்பில் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவர் தரப்பை சார்ந்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 215 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'ரிப்பிட்டர்' துப்பாக்கி வழங்கப்பட்டது

## ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு கிடைத்தது



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பத்து பேரைத் தவிர, ஏனைய அனைவரும் தலா இரண்டு ரிப்பீட்டர் துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெற்றுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர்களுடைய தனிப்பட்ட பாதுகாப்புக்கு இந்தத் துப்பாக்கிகள் தேவைப்படும் என்பதால், இவ்வாறு அவர்களுக்கு துப்பாக்கிகள் அவசரமாக வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற "அரகலய" என்று சொல்லப்படும் மக்கள் கிளர்ச்சியின் இறுதி நாட்களின் போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்குச் சொந்தமான வீடுகளுக்கு தீவைக்கப்பட்டது. மற்றொரு நடாளுமன்ற உறுப்பினர் அடித்துக்கொல்லப்பட்டார்.

இவை தொடர்பாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து தலா இரண்டு ரிப்பீட்டர் துப்பாக்கிகளை 215 எம்.பி.க்கள் பெற்றுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார். ரிப்பீட்டர் துப்பாக்கி என்பது மீண்டும் தோட்டாக்களை நிரப்பாமல் பலமுறை சுடக்கூடிய துப்பாக்கியாகும். அத்தகைய ரிப்பீட்டர் துப்பாக்கியில் ஒரே நேரத்தில் பத்து தோட்டாக்களை நிரப்பலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு எம்.பி.க்கும் இரண்டு ரிப்பீட்டர் "ஷெ ாட்கண்கள்' வேண்டும் என்ற கோரிக்கை சுமார் பத்து மாதங்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் விடுக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இதற்கு இணக்கம் தெரிவித்ததையடுத்து ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்தத் துப்பாக்கிகள் அவர்களுக்கு அவசரம் – அவசரமாக வழங்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர்மட்ட வட்டாரம் கூறுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்களில் பத்து பேரைத் தவிர, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவற்றுக்கான பணம் செலுத்திய பின்னர் துப்பாக்கிகளை பெற்றுள்ளனர் என்று தெரிவித்தார்கள்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கிகள் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை தற்போது செயலிழந்த நிலையில் உள்ளன, எனவே ரிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்க முடிவு எடுக்கப்பட்டது என்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுபோன்ற துப்பாக்கிகளை எந்த மூன்றாம் தரப்பினருக்கும் மாற்றக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு, அவற்றைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிபந்தனை விதித்துள்ளது. துப்பாக்கிகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் பதவியில் இருந்து வெளியேறினாலும் அவற்றை திருப்பி கையளிக்காது தங்களுடன் வைத்துக் கொள்ள உரிமை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

2022 மே மாதம் 9 ஆம் திகதி "அரகலய" போராட்டத்தின் உச்சக்கட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். மேலும், 72 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட நூலகத்தை உள்ளடக்கிய வீடும் எரிக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

இந்தப் பின்னணியில் தேர்தல்கள் மூலமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், அதற்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதிப்பத்திரத்துடன் கூடியதாக துப்பாக்கிகளை வழங்கிவிட வேண்டும் என்பதில் அரசாங்கத் தரப்பினர் அவசரமாகச் செயற்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.



# ஜனாதிபதி வேட்பாளர்களில் 23 பேர் பிரசாரத்தை ஆரம்பிக்கவேயில்லை

## பஃப்ரல் அமைப்பின் பணிப்பாளர்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்களில் 23 ஜனாதிபதி வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரப்புரைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும், சில வேட்பாளர்களுக்கு கட்சி அலுவலகங்கள் கூட இல்லை என்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு இன்னும் ஒரு வார காலம் மட்டுமே இருக்கின்ற நிலையில், பத்து வேட்பாளர்கள் மாத்திரமே தமது கொள்கைகளை முன்வைக்க நேரத்தை எடுத்துக் கொண்டுள்ளதாகவும், சில வேட்பாளர்கள் கட்சி அலுவலகத்தை கூட அமைக்கவில்லை எனவும் சில வேட்பாளர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதையே அறிந்துகொள்ள முடியவில்லை என்றும் பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்திருக்கின்றார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு 39 வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த போதிலும், அதில் ஒருவர் மரணமடைந்திருப்பதால், 38 பேர் களத்தில் உள்ளனர். இது வரலாற்றில் அதிகூடிய வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தல் என்றும், ஆனால், இவர்களில் 10 பேர் மாத்திரமே தற்போது பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



இந்த 38 வேட்பாளர்களில் குறைந்தது 15 வேட்பாளர்கள் மாத்திரமே தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்தியுள்ளனர். ஏனைய 23 பேரில் ஒருவர்கூட தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்தவில்லை என்று ஜனநாயகம், மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டியிருந்தார்.

இதுவரை குறைந்தபட்சம் மூன்று வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனு பற்றி பகிரங்க அறிக்கைகள் எதையும் வெளியிடவில்லை. அவர்கள் வேட்பு மனுக்களில் கையொப்பமிட்டு, கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தாலும் அவர்கள் தங்களை வேட்பாளர்களாக எங்கும் அறிமுகப்படுத்தவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

சிலர் தங்கள் வேட்பு மனுக்களில் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலங்கங்கள் தவறானவையெனவும் சில அழைப்புகள் பதிலளிக்கப்படாமல் துண்டிக்கப்படுவதாகவும் மஞ்சுள கஜநாயக்க மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# இராணுவத்தின் உரிமைகள் குறித்து பேச ரணில், சஜித், அநுரவுக்கு உரிமையில்லை

## சரத் வீரசேகர



இராணுவத்தினரின் கௌரவம் மற்றும் உரிமைகளை பொதுஜன பெரமுனவினால் மாத்திரமே பாதுகாக்க முடியும். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ரணில், அனுர, சஜித் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். 13க்கு ஒருபோதும் இடமில்லை என்று நாமல் ராஜபக்ஷ மாத்திரமே குறிப்பிடுகிறார். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க விரும்புபவர்கள் பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொஸ்கம பகுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தபோது, "பொதுஜன பெரமுனவின் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் கொள்கை மற்றும் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதியின் பக்கம் சென்றுள்ளார்கள். குறுகிய நோக்கங்களுக்காக நாங்கள் கட்சியை விட்டுச் செல்லவில்லை. பெரும்பான்மையானவர்கள் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இந்த மூன்று வேட்பாளர்கள் இராணுவத்தினரது உரிமைகளை பாதுகாப்பதாக குறிப்பிடுகிறார்கள். 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கமே சர்வதேசத்துக்கு காட்டிக் கொடுத்தது. இதற்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார ஆகியோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

இராணுவத்தினரது உரிமைகள் பற்றி பேசுவதற்கு ரணில், சஜித், அநுர ஆகியோருக்கு தார்மீக உரிமை கிடையாது. யுத்த காலத்தில் வடக்கு மாகாணத்துக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் விநியோகத்தை வேண்டுமென்றே இடைநிறுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றது.

யுத்த சூழலிலும் வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றினோம்.

இராணுவத்தினர் யுத்தக் குற்றச்சாட்டுக்களில் ஈடுபடவில்லை என்பதை எடுத்துரைக்கும் வகையில் தான் கோட்டாபய ராஜபக்ஷ ஜெனிவா தீர்மானத்துக்கு இணையனுசரனை வழங்குவதில் இருந்து விலகினார். இராணுவத்தினரின் கௌரவம் மற்றும் உரிமைகளை பொதுஜன பெரமுனவினால் மாத்திரமே பாதுகாக்க முடியும்" என்றும் தெரிவித்தார்.

# சஜித்துக்குக் கொடுக்கும் வாக்குகள் விகாரைகளுக்கான அடிக்கல்லாகும்

## பொது வேட்பாளர் அரியநேத்திரன்



"நல்லாட்சி அரசாங்கத்தில் 1126 பௌத்த விகாரைகளை வடக்கு கிழக்கிலே அமைப்பதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்று அதனை தற்போதும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார் சஜித் பிரேமதாச" என்று தெரிவித்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், "எனவே சஜித்துக்கு நாங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு புள்ளடியும், ஒவ்வொரு பௌத்த விகாரைகளுக்கும் நடப்படுகின்ற அடிக்கல்லாகதான் அமையும்" என்றும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு பெரியபோரதீவு பகுதியில் மக்கள் சந்திப்புகளிலும் தேர்தல் பரப்புரைப் பணிகளிலும் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

"சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு, சமஷ்டி அடிப்படையிலான யோசனைகள் குறித்து எந்த ஒரு வாசகங்களும் குறிப்பிடப்படவில்லை" என்று சுட்டிக்காட்டிய அரியநேத்திரன், "ஆனால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்க தயார் என்று தான் எனது தமிழ் தலைமைகள் கூறியிருந்தனர்" என்றும் தெரிவித்தார்.

"ஆனால், அவர்களின் எந்த ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமஷ்டி தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. 2015 நல்லாட்சி அரசாங்கத்திற்குள் ஏக்கிய ராஜ்ய என்பதற்குள் நாங்கள் சமஷ்டியையும் தேடினோம், அதுகூட இவர்களது விஞ்ஞாபனங்களில் இல்லை. எனவே அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே இந்த பிரதான மூன்று சிங்கள வேட்பாளர்களும் உள்ளார்கள்" என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார்.



# விவாதத்துக்கு ரணில் தயார் என்றால் அநுர குமரவும் தயராகவே இருக்கிறார்

## ரில்வின் சில்வா

அநுரகுமார திஸாநாயக்கவுடன் விவாதத்திற்கு ரணில் விக்கிரமசிங்க தயார் என்றால், அந்த விவாதத்திற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம் என்று ஜே.வி.பி தலைவர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அநுரகுமாரவுடன் விவாதத்திற்கு தான் தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை தொடர்பில் நேற்று புதன்கிழமை தேசிய மக்கள் சக்தியினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரில்வின் சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது ரில்வின் சில்வா கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் தயார் என்றால், எப்போது விவாதத்தை நடத்தலாம் என்று உத்தியோகபூர்வமாக கூறினால் நாங்கள் அது தொடர்பில் ஆராயலாம். ஏற்கனவே சஜித் தரப்பினருடன் விவாதத்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம்.

ஆனால் அவர்கள் வரவில்லை. இப்போது ரணில் விவாதத்திற்கு தயார் என்று கூறுவதாக தெரிவிக்கப்படுகின்றது" என்றும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# இன்றைய சூழலில் நாட்டுக்கும் மக்களுக்கும் ரணிலின் தேர்தல் வெற்றியே அவசியமாகும்

## அமைச்சர் டக்ளஸ் அறைகூவல்




நாட்டினதும் தத்தமதும் எதிர்காலம் கருதியும் மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து தெளிவுடன் தமது வாக்குகளை ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கவார்களாயின் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் சிறப்பான பொருளாதாரத்துடன் கூடிய வாழ்க்கை கட்டமைப்பு உருவாக்கிக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிடைத்துள்ள இத்தகைய சந்தர்ப்பத்தை எமது மக்கள் தவறவிடமாட்டார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்த மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவின் அனுபவம் அவருக்குள்ள சர்வதேச நாடுகளுடனான உறவு மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை அகியவற்றை கொண்டு அவரே தொடர்ந்தும் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என்பதே நாட்டிலுள்ள அனேகமானவர்களின் விருப்பாக உள்ளது.

அதேபோன்று ஒவ்வொரு வீட்டிலும் இன்று எரிவாயு அத்தியாவசியமான பொருளாக இருக்கின்றது. அதேபோலத்தான் இன்றைய நாட்டின் சூழ்நிலைக்கும் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி அவசியமாக இருக்கின்றது.

எனவே வரவுள்ள 21 ஆம் திகதி நடைபொறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு மக்களும் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் அவரது சின்னமான எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிப்பது அவசியமாகும்.

இதை நான் வெறும் வாக்குகளை பெறுவதற்காக கூறவில்லை. உங்கள் ஒவ் வொருவரதும் எதிர்காலத்தை மட்டுமல்லாது நாட்டையும் ஒளிமயமாக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகொள்ள வைக்கும் ஆளுமை அவரிடமே இருக கின்றது” என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

“மேலும் கடந்த கால வரலாற்றை எடுத்துக கொண்டால் ஆரம்பதிலிருந்து ஈ.பி.டி.பி சரியா வழிகாட்டலை செய்து வந்துள்ளது. எமது கொள்கையும் வழிமுறையும் சரியானதாக இருப்பதை கண்டு அதுதான் வெற்றி அடையப் போகின்றது என்ற உண்மையை உணர்ந்த சக தமிழ் கட்சிகளும் குழுக்களும் அச்சம் கொண்டு தமிழ் தேசிய கூட்மைப்பு என்ற ஒன்றை கட்டமைத்து அரசியல் செய்தார்கள்.

ஆனால் சக தமிழ் கட்சிகளிடம் நிலையான கொள்கை ரீதியாக எந்தவொரு வேலைத் திட்டமோ அதற்கான பொறிமுறையோ இருக்கவில்லை. அது தொடர்பாக அக்கறையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

இதனிடையே நேற்று முன்தினம் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் வரலாறு காணாத வகையில் மக்கள் திரட்சியை ஈ.பிடி.பி செய்து காட்டியுள்ளது. இது பலருக்கு வயிற்றில் புளியை கரைக்க ஆரம்பித்துவிட்டது. இதனால் எம்மீது சேறுபூசல்களையும் அவதூறுகளையும் செய்ய முயற்சிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால் ஈ.பி.டி.பியினராகிய நாம் சரியான வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் வைத்திருந்தோம். இதனால்தான் எம்மை மளுங்கடிப்பதற்காக பல்வேறு சேறுபூசல்களை மேற்கொண்டு வந்தார்கள். இதேநேரம். எமது கொள்ககைளும் வழிநடத்தலும் சரியானதாக இருந்துவருகின்றமையால்தான் இம்முறை ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் குறிப்பாக தமிழ் மக்களிடம் நான் அறைவுவல் விடுக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியினூடாகத்தான் மக்களின் அபிவிருத்தியோ அன்றாட பிரச்சினையையோ அரசியலுரிமை சார் பிரச்சினைகளுக்கோ தீர்வை எட்ட முடியும் இதுவே உண்மையும் கூட“ என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (001)

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# ஜனாதிபதி ரணிலின் வெற்றி உறுதி என்கிறார் பிள்ளையான்

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாவார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்போது, கிழக்கு மக்களும் அதில் பங்குதாரர் ஆக வேண்டும்.” - என்று இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ‘ரணிலால் இயலும்’ வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலையும் விரைவில் நடத்தி அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, யாழ்ப்பாணத்திலிருந்து சொல்வதைக் கேட்டுக்கொண்டு அழிவை நோக்கி நகர்வதா ஜனாதிபதியுடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அமைச்சு ஒன்றைப் பெற்றுக்கொள்வதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” - என்றார்.

# தவறான தவவல் பகிரப்படுவதை தடுப்பதற்கான டிக்டொக் செயலி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தவறான தகவல்கள் பகிரப்படுவதை தடுக்க டிக்டொக் தயாராகி வருகிறது. தேர்தல் தொடர்பில் பகிரப்படும் உள்ளடக்கங்களை

சரிபார்க்க IFCN-அங்கீகாரம் பெற்ற நியூஸ்செக்கர் (Newschecker) தகவல் சரிப்பார்த்தல் அமைப்புடன் டிக்டொக் கைக்கோர்த்துள்ளது.

அத்தோடு, டிக்டொக் இலங்கை தேர்தல் மையத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தேர்தல் மையம் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தனது சேவைவை வழங்குகிறது.

பயனர்களுக்கு தேர்தல்தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை வழங்குகிறது. இவற்றிலுள்ள அறிக்கையிடல் கருவிகள் பயனர்களை தவறாக வழிநடத்தும் உள்ளடக்கத்தை அடிகோடிட்டு காட்டும்.

இந்நிலையில், டிக்டொக்கின் உண்மை சரிப்பார்த்தல் வழிகாட்டுதல்களை மீறும் தகவல்களை அகற்றுதல், பகிரப்படுவதை கட்டுப்படுத்தல் மற்றும் நம்பகமான ஆதாரங்களுக்கு தேடல்களுக்கு வழிகாட்டல் ஆகியவற்றை செயற்படுத்தும். வெளிப்படைத்தன்மை மற்றும்நேர்மையான தேர்தல்முறையை பேணுவதற்கு பாதுகாப்பான அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இந்த தளம் தொடர்ந்து செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது







## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்ததாவது -

“இன்று 116 ஆவது தேசிய சிறைக் கைதிகள் தின நிகழ்வுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருகக்கூடிய இடவசதியினைக் கொண்ட சிறைக்கூடங்களுக்குள் 24 ஆயிரம் கைதிகளை திணித்து அடைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலையே சிறைத்துறை இந்த கைதிகள் தின நிகழ்வை மேற்கொண்டு வருகின்றது.

இருப்பினும் உணவு, நீர், சுகாதாரம், மற்றும் மருத்துவம்போன்ற அடிப்படை கட்டமைப்புகள்போதுமற்ற நிலையில் பெயருக்காக கொண்டாடப்படுகின்றதா இந்த தேசிய சிறை கைதிகள் தினம்? என்கின்ற கேள்வி எழுகிறது. இத்தனை மோசமான கட்டமைப்பை கொண்டியங்கும்சிறைக்குள்ளேயே சமூகத்தை நேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள், 30 ஆண்டுகளாக வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை கொடூரமானது?

எமது நாடு, ஜனநாயக நாடு. நாம் கருணை அன்பு மிக்கதொரு பாரம்பரிய சமூக சமயத்தை சார்ந்தவர்கள். மறப்போம் மன்னிப்போம் என்பது எமது கொள்கையில் ஒரு அங்கம்.” என மேடை முழக்கம் செய்கின்ற அரசும் அதன் அதிகாரமும்தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றதா, எனக் கேட்கின்றோம்.

இன்று, தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்கிறது. ஆனபோதிலும், தமிழினத்தின் பெயரில் மூன்று தசாப்த காலங்களாக சிறையில் கொடுமை அனுபவித்து வரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை.

உண்மையிலேயே ஒரு ஜனநாயக நாட்டினுடைய சட்டங்களை அமுல்படுத்துகின்ற நீதித்துறையும் அதற்கு ஒப்ப இயங்குகின்ற சிறை த்துறையும் அரச இயந்திரத்தின் முக்கிய இரு பிரிவுகளாகும். இவைகள், குற்றங் காணும் குடிமக்களை சீர்திருத்தி, குறிப்பிட்டதொரு காலத்துக்குள் மீண்டும் அவர்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொறுப்புக்குரிய நிறுவனங்களாகும்.

ஆனாலும், தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலை விடயத்திலே அரசும் அதன் இயந்திரங்களும் மாற்றான் தாய் மனப்போக்குடன் நடந்து கொள்வதன் நோக்கம் என்ன?

காலம் காலமாக கதிரையேறும் சிங்கள ஆட்சி அதிகாரங்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சூரையாடும் கலாச்சாரத்திற்கு இனிமேலாவது முற்றுப்புள்ளியிட வேண்டும். மக்களினதும் சர்வதேசத்தினதும் பார்வைக் கோணங்களை திசை மாற்றும்கைங்கரியத்தை கைவிட வேண்டும். நிச்சயமாக இதற்குமேலும், கால வீணடிப்புச் செய்யாது தமிழ் மக்களின் தீர்க்கப்பட வேண்டிய அவசர அடிப்படை விடயங்களுக்கு தீர்வினைக் கூற வேண்டும்.

குறிப்பாக, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையான இறுதி நிலைப்பாட்டை பொது வெளியில் தெரிவிக்க வேண்டும் என்பதை, ‘குரலற்றவர்களின் குரல்’ மனிதநேய அமைப்பினராகிய நாம், இந்த ஆண்டு தேசிய சிறைக் கைதிகள் தின பகீரங்க கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

அவ்வாறில்லையேல், இந்த நாட்டினுடைய ஆட்சி அதிகாரங்களுக்கும் அதற்குத் துணை செய்யும் குடி மக்களுக்கும், தமிழினத்தின் சாபக் கேடென்பது தவிர்த்தொதுக்க முடியாத ஒரு காலத்தின் நியதியாகும் என்பதை நினைவூட்டக் கடமைப்படுகின்றோம்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அநுரவை...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படுத்தியதாக குற்றம்சுமத்தி தேசப்பற்றுள்ள மக்கள் சக்தியினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்துக்களால் இன முரண்பாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவாபத்திரன குறிப்பிட்டுள்ளார்.

# தொழிலாளர் நலனை பாதிக்குமா செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி?

பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) ஏற்படுத்திவரும் தாக்கம் குறித்த ஆய்வுகள் நடைபெற்றுவரும் சூழலில், ஏஐ-யின் வருகையால் தொழிலாளர்களின் வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் எதிர்மறை விளைவுகள் குறித்த அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியிருக்கிறது. சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (Ivy;X) வெளியிட்டிருக்கும் சமீபத்திய ஆய்வறிக்கையில், உலக அளவில் தொழிலாளர் வருமான அளவு தேக்கமடைந்திருப்பதற்கு, ஏஐ ஒரு முக்கியக் காரணி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



செப்டம்பர் 4இல், ஜெனீவாவில் உள்ள ஐஎல்ஓ-வின் தலைமையகத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ‘உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம் – செப்டம்பர் 2024’ அறிக்கை, பல்வேறு நாடுகளில் நிலவும் வேலைவாய்ப்பின்மை, குறைந்த சம்பளம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைப் பதிவுசெய்திருக்கிறது.

36 நாடுகளில், கடந்த இரண்டு தசாப்தங்களில் தானியங்கித் தொழில்நுட்பம், ஏஐ உள்ளிட்ட தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தியிருக்கும் தாக்கம் குறித்து ஆய்வு செய்திருக்கும் ஐஎல்ஓ, இந்தக் கண்டுபிடிப்புகள் தொழிலாளர் உற்பத்தித் திறனையும், ஒட்டுமொத்த உற்பத்தியையும் தொடர்ச்சியாக அதிகரித்து வந்திருந்தாலும், அவை தொழிலாளர் வருமான அளவைக் குறைத்திருப்பதாகச் சுட்டிக்காட்டுகிறது. கல்வி, பயிற்சி, வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்காமல் உலக அளவில் ஏராளமான இளைஞர்கள் தவித்துவருவதாகவும் ஐஎல்ஓ அறிக்கை கவலை தெரிவிக்கிறது.

குறிப்பாக, 2004 முதல் 2024 வரையிலான கடந்த 20 ஆண்டுகளில், உலக அளவில் தொழிலாளர் வருமான அளவு 1.6மூ குறைந்திருப்பதாக இந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இந்த விகிதம் குறைவானதாகத் தோன்றினாலும், உலக அளவில் இந்த இழப்பின் மதிப்பு 2.4 ட்ரில்லியன் டாலர்கள் என்பது கவனிக்கத்தக்கது. கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தொழிலாளர் வருமான அளவு 40மூ வரை குறைந்ததாகக் கூறும் இந்த அறிக்கை, ஏற்கெனவே இருந்துவந்த ஏற்றத்தாழ்வைப் பெருந்தொற்றுக் கால நெருக்கடி மேலும் தீவிரப்படுத்தியதாகவும் சுட்டிக்காட்டுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (எஸ்டிஜி) எட்டக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதற்கான பயணம் மிகவும் தாமதமாவதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. தானியங்கி-ஏஐ தொழில்நுட்பங்களின் வருகையால், அதிக வருமானம் கொண்ட வேலைவாய்ப்புகள் உருவாகியிருப்பதாகத் தொழில் துறையின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. எனினும், இந்தத் தொழில்நுட்பங்கள் காரணமாக ஆள் குறைப்பு, ஊதியக் குறைப்பு போன்றவையும் நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதையும் மறுக்க முடியாது.

இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கும் ஐஎல்ஓ-வின் துணைப் பொது இயக்குநர் செலெஸ்ட் டிரேக், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, அனைவரும் நிலைத்த வளர்ச்சியைப் பெறுவதற்கான பாதையை உருவாக்குவது அவசியம் எனக் குறிப்பிட்டிருக்கிறார். குழுவாக இணைந்து இயங்குவதற்கான உரிமை, பேரம் பேசுவதில் ஒருங்கிணைப்பு, சிறப்பான தொழிலாளர் நிர்வாகம் என்பன உள்ளிட்ட பொருளாதாரப் பலன்களைத் தொழிலாளர்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையிலான கொள்கைகள் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

டெல்லியைமையமாகக்கொண்டு இயங்கிவரும் மனித வளர்ச்சிக்கான நிறுவனத்துடன் இணைந்து, 2024 மார்ச் 26இல் ஐஎல்ஓ வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் வேலை கிடைக்காதவர்களில் – இளைஞர்களின் எண்ணிக்கை 82.9மூ ஆக அதிகரித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை பல்வேறு வடிவங்களில் நீடிப்பதையே ஐஎல்ஓ-வின் சமீபத்திய அறிக்கை உறுதிப்படுத்துகிறது. தொழிலாளர்களைக் காப்பதில் அரசுகள் தீவிர முனைப்புக் காட்ட வேண்டிய தருணம் இது!






# கல்முனை சாஹிரா மாணவன் தங்கப்பதக்கம் பெற்று சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் செவ்வாய்க்கிழமை கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஜே.எம். ஆதிப் 16 வயது ஆண்கள் பிரிவில் 400 மீற்றர் அஞ்சலோட்ட நிகழ்ச்சியில் தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டி, பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளதோடு, தேசியமட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.

இவ் வெற்றிக்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் (SLEAS) மற்றும் பிரதி, உதவி அதிபர்கள், மாணவர்களை வழிநடத்தி, பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.அப்ராஜ்றிழா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம்.யூ.ஏ. சம்லி, ஏ.எம்.ஜப்ரான் போட்டியில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டி, வெற்றிபெற்ற மாணவனுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற்கொண்ட பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழு (SDEC) மற்றும் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



# மட்டு பெற்றி பிக் பாஸ் போட்டி: பழுகாமம் புள்ஸ் அணி சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி சபை ,மட்டக்களப்பு மாஸ்டர் கிரிக்கெட் கிளப் ஆகியன இணைந்து முதல் தடவையாக நடத்திய 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான பெற்றி பிக்பாஸ் (டீயவவை டீபைடியளா) ஜூனியர் போட்டிகளில் மட்டக்களப்பு பழுகாமம் புள்ஸ;( Palukamam Bulls) அணி சாம்பியன் மகுடத்தை சூடியது.

மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பழுகாமம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 133 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பிடத்தாடிய காத்தான்குடி லயன்ஸ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 113 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கட்டுக்களையும் பறிகொடுத்தது, இதன் மூலமாக 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பழுகாமம் அணி சாம்பியன் மகுடத்தை தனதாக்கியது. இறுதிப் போட்டியின் நாயகனாக நித்தியதர்சன் தேர்வு செய்யப்பட்டார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2024இல் வெளியிடப்பெற்றது.